**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்.</u>**

**முன்னிலை: திரு.*S*.பாஸ்கரன்,B.Sc.,B.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2048 ஆவணித்திங்கள் 1 ஆம் நாள்

**<u>அசல் வழக்கு எண்.88/16ல் இடைநிலை மனு எண்.85/17</u>**

1. எலிசபெத்மேரி
2. சுசிலாமேரி
3. அல்லிஸ்மேரி
4. சின்னம்மாள் **....மனுதாரர்கள்/ வாதிகள்**

-எதிர்-

ஆரோக்கியசாமி சுந்தரம்
**...எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி**

WEB COPY

இம்மனு என் முன்பாக 31.07.2017 இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.**M.பாலையன், M.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**V. ஜீவகுமார்,B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், மனுவை இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

(1) எதிர்மனுதாரர் மனுச்சொத்துக்களில் உள்ள மரங்களை வெட்டவோ, அகற்றவோ கூடாது என அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 39 விதிகள் 1 மற்றும் 2 ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>(2) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரத்தின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் அனைவரும் உடன்பிறந்த சகோதரிகள். இவ்வழக்கின் பிரதிவாதிகள் அவர்களின் உடன் பிறந்த சகோதரர்கள். தரப்பினர்களின் பெற்றோரான சந்தியாகு உடையார் மற்றும் நட்சத்திரம் அம்மாள் ஆகியோர் தங்கள் சொத்துக்கள் குறித்து எந்த ஏற்பாடும் செய்துவைக்காமல் இறந்துவிட்டநிலையில் பாகப்பிரிவினைக்காக மனுதாரர்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். ஆதியில் இரண்டு பிரதிவாதிகளும் தோன்றாத்தரப்பினராகிவிட்ட நிலையில் தற்போது இந்த எதிர்மனுதாரர் மட்டும் மேற்படி

உத்தரவை ரத்து செய்யக்கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிர்மனுதாரர் கடந்த 25.06.2017 அன்று மனுச்சொத்துக்களில் இருந்த அனைத்து மரங்களையும் வெட்டி அகற்றி மனுதாரர்களுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்தார். ஆகவே, அவ்வாறு அவர் மரங்களை வெட்டி அகற்றக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. இல்லாவிடில், மனுதாரர்களுக்கு ஈடுசெய்யமுடியாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். மனுதாரர்களின் பெற்றோர் இறக்கும்வரை அவர்களது அனுபோகத்தில் இருந்து, அதற்காக வருவாய் ஆவணங்களிலும் பதிவுகள் உள்ள நிலையில் மனுதாரர்களுக்கு தாவா சொத்துக்களில் பாகம் கேட்க உரிமையுள்ளது. மரங்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தக்கூடாது என உத்தரவு கேட்பதற்கான ஒரு முகாந்திர வழக்கும் உள்ளது. ஆகவே, மனுவில் கேட்டுள்ளபடி இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

WEB COPY

**(3) எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள தேதியில் இந்த எதிர்மனுதாரர் மரங்களை வெட்டவோ, அகற்றிச்செல்லவோ இல்லை. புல எண்கள் 202/6C மற்றும் 201/10 ஆகியவை அசல் வழக்கில் இல்லாதபோது இம்மனுவில் சேர்த்துள்ளது தவறானது. தாவா சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்வாறு சித்தித்தன என்பது பற்றியும், தகப்பனார் எழுதி வைத்த உயில் பற்றியும் எதிர்வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி உயில்படி இந்த எதிர்மனுதாரர் சொத்தை அடைந்து, இதுவரை அதன் அனுபோகத்தில் உள்ளார். மனுதாரர்கள் தூய கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகவில்லை. வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**(4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்:**
**“இம்மனு அனுமதிக்கத்தக்கதா?” என்பதேயாகும்.**

**(5) பிரச்சினை:**

எதிர்மனுதாரர் மனுச்சொத்துக்களில் உள்ள மரங்களை வெட்டி அகற்றிவிடக் கூடாது என்ற வகையில் வழக்கு முடியம் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை கேட்டு மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் தரப்பினர்களின் பெற்றோருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எனவும், அவர்கள் சொத்துக்கள் பொறுத்து எந்த

ஏற்பாடும் செய்துவைக்காமல் இறந்துவிட்டதால், தங்களுக்கு தாவா சொத்துக்களில் 4/6 பாகம் கிடைக்கக்கூடியது எனவும் தெரிவித்து மனுதாரர்கள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் 2ஆம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகிவிட்டார். முதல் பிரதிவாதியாகிய இந்த எதிர்மனுதாரர் மட்டுமே கட்சியாடி வருகிறார். அதில் தாவா சொத்துக்கள் தன் பெற்றோர்களான சந்தியாகு உடையார் மற்றும் நட்சத்திரம் அம்மாள் எழுதிவைத்த உயில்கள்படி தனக்கு பாத்தியப்பட்டவை என்பதாகவும், தன் அனுபோகத்தில் இருந்து வருகின்றன என்பதாகவும் தாவா “A” பட்டியல் சொத்தில் கண்டுள்ள புல எண்.196A-8C-ல் உள்ள சொத்து தன் சுய சம்பாத்திய சொத்து எனவும் கட்சியாடுகிறார். மேலே குறிப்பிட்ட உயில் மற்றும் கிரய சாசனத்தை அவர் இம்மனுவில் எ.ம.சா.ஆ.1 மற்றும் 2ஆக தாக்கல் செய்துள்ளார். மேலும், இம்மனுவில் புல எண்கள் 202/6C மற்றும் 201/10 ஆகியவை அசல் வழக்கில் இல்லாமல் இம்மனுவில் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக இம்மனுவில் ஒரு வாதத்தை முன்வைக்கின்றார். மேற்படி இரண்டு புல எண்களும் இம்மனுவில் சேர்க்கப்படவில்லை. ஆகவே, எதிர்மனுதாரரின் இந்த கட்சியை நாம் பரிசீலிக்க வேண்டியதில்லை. மனுதாரர்கள் தரப்பில், தாவா சொத்துக்கள் தகப்பனார் சந்தியாகு உடையார் பெயரிலும், தாயார் நட்சத்திரம் அம்மாள் பெயரிலும் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதாகவும், அவர்கள் இருவரும் இறந்துவிட்டதாகவும், அவர்கள் இறக்கும்வரை சொத்துக்கள் அவர்களது அனுபோகத்தில் இருந்ததற்கான வருவாய் ஆவணங்கள் உள்ளன என்பதாகவும், எதிர்மனுதாரர் தாவா நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்துக்களில் உள்ள மரங்களை வெட்ட முயற்சித்தபோது போலீசில் புகார்கள் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரர்களின் பெற்றோர் இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ்கள்தான் ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆகும். வருவாய் ஆவணங்களின் நகல்கள் ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.12 வரையாக குறியிடப்பட்டுள்ளன. சந்தியாகு உடையார் பெயரிலான கிரய சாசனங்கள் ம.சா.ஆ.13 மற்றம் 14 ஆகும். மனுதாரர்களால் எதிர்மனுதாரர் மீது காவல்துறையில் கொடுக்கப்பட்ட புகார்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தான் ம.சா.ஆ.15 மற்றும் 16 ஆகும். தாவா சொத்துக்கள் சந்தியாகு உடையார், நட்சத்திரம் அம்மாள் தம்பதி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதையோ, அவர்கள் உயிருடன் இருக்கும் வரை அவர்கள் அனுபோகத்தில் இருந்தவை என்பதையோ எதிர்மனுதாரர் மறுக்கவில்லை. மாறாக, அவர்களது உயில் மூலம் சொத்துக்கள் தன் பாத்தியத்திற்கும், அனுபோகத்திற்கும் அவர்கள் இறப்பிற்குப்பின் வந்துவிட்டன என்பதுதான் அவரது கட்சியாகும். ஆகவே, இவ்வழக்கில் பிரதான தீர்விற்குரிய பிரச்சினை எதிர்மனுதாரர் கொண்டாடும் உயில்கள் உண்மையானவையா, அவை நடைமுறைக்கு வந்துவிட்டனவா என்பது மட்டுமே. அது நிரூபிக்கும்பட்சத்தில் மனுதாரர்கள் /வாதிகளுக்கு பாகம் சித்திக்கக் கூடியதில்லை. மனுதாரர்கள் கூற்றுப்படியே எதிர்மனுதாரரும், வாதிகளும் தாவா சொத்துக்களில் கூட்டுரிமையாளர்கள்தான். ஆகவே, ஒரு கூட்டுரிமையாளருக்கு எதிராக

WEB COPY

மற்றொரு கூட்டுரிமையாளர் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பது எளிதானதல்ல. அதற்கான ஒரு வலுவான வழக்கை அவர் முன்வைக்க வேண்டும். அத்தோடு மட்டுமின்றி இந்த மனுவில் கேட்டுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் சிலவற்றில் உள்ள மரங்களை வெட்டி அகற்றக்கூடாது என்ற வகையில்தான். ஆனால், மனுதாரர்களே தாங்கள் தாக்கல் செய்துள்ள இடைநிலை மனு எண். 74/2017 ல் எதிர்மனுதாரர் ஸ்தலத்தில் உள்ள அனைத்து மரங்களையும் வெட்டி அகற்றிவிட்டார் என்பதாகவும், அவற்றின் மதிப்பு ரூ.7,50,000/- எனவும், அதில் தங்கள் பாக வீதத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார்கள். ஆகவே, இனியும் வெட்டுவதற்கு மரங்கள் எதுவும் இருப்பதாக மனுதாரர்களால் ஒரு முதல்நோக்கு வழக்கு முன்வைக்கப்படவில்லை. அப்படியிருக்கும்பட்சத்தில், இல்லாத மரங்களை வெட்டக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை கேட்பது இயலாது. மேலும், ஏற்கனவே கண்டதுபோல் கூட்டுரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை கேட்பதும் எளிதானதல்ல. ஆகவே, இடைக்கால உறுத்துக்கட்டளை பெறும் வகையிலான ஒரு முதல்நோக்கு வழக்கோ, சமநிலை வாய்ப்போ மனுதாரர்கள் பக்கம் இல்லை என்றே முடிவு செய்ய வேண்டியதாய் உள்ளது. ஆகவே, மேற்கண்ட வகையில், இங்கு உள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

WEB COPY

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுவின் செலவுத்தொகை பொறுத்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2017ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 17ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

(ஒ-ம்) ***S*. பாஸ்கரன்**

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

தஞ்சாவூர்

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்: இல்லை**

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1. | 20.04.2005 | நட்சத்திரம் என்பவரின் இறப்புச்சான்றிதழின் அசல் |
| ம.சா.ஆ.2. | 14.06.2012 | சந்தியாகு என்பவரின் இறப்புச்சான்றிதழின் அசல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3. | …......... | புதுப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 04.08.2016 | நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் உண்மைநகல் |
| ம.சா.ஆ.5 | …........... | புதுப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.6 | …........... | புதுப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | …........... | புதுப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.8 | …........... | புதுப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.9 | …............ | சானூரப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.10 | …............ | சானூரப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.11 | …............ | சானூரப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.12 | …............ | சானூரப்பட்டி கிராம “ஏ” பதிவேட்டின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.13 | 13.08.1968 | சந்தியாகு உடையாருக்கு, ஆண்டியப்ப மேற்கொண்டார் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.14 | 30.07.1968 | சந்தியாகு உடையாருக்கு, லோகம்மாள் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.15 | 09.06.2017 | 2ஆம் மனுதாரர் சுசிலா என்பவர் பூதலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் |
| ம.சா.ஆ.16 | 18.06.2017 | 2 முதல் 4 மனுதாரர்கள் பூதலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் மற்றும் புகார் மனுவிற்கானரசீது |

WEB COPY

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்: இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 17.06.1981 | ஆரோக்கியசாமி சுந்தரம் உடையார் அவர்களுக்கு ரஞ்சிதமரியம்மாள் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரயசாசனத்தின் அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 21.09.2006 | சந்தியாகு உடையார் எழுதிவைத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் அசல் |

(ஒ-ம்) ***S*. பாஸ்கரன்**

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

தஞ்சாவூர்

WEB COPY

**வரைவு/சீரான உத்தரவு**
**அசல் வழக்கு எண்.88/16ல்**
**இடைநிலை மனு எண்.85/17**
**நாள்: 17.08.2017**

WEB COPY